**<u>உசிலம்பட்டி நகராட்சி மன்றம்</u>**

**<u>நகர்மன்றக்கூட்டம்</u>**

**<u>நாள். 31.08.2021 செவ்வாய்க்கிழமை நேரம் : காலை 10.00 மணி</u>**

---

**<u>நகர்மன்றக்கூட்டம் : நாள். 31.08.2021</u>**

**மன்றப்பொருள்–1**

இந்நகராட்சியின் பொதுச்சுகாதார வாகனம் எண் TN-58 AS 3927 வண்டிக்கு தகுதிச்சான்று மற்றும் இஞ்சின் ஆயில் மாற்றுதல், பெயிண்டிங் ஒர்க்ஸ், டிங்கர் வேலை, கிளட்ச் பிளேட் மாற்றுதல், பிரேக் செக்கப், செல்ப் மோட்டார் செக்கப் புதிய பேட்டரி 1 எண்ணம், ஸ்டெப்னி டயர்–1 எண்ணம் வேலைகள் பார்ப்பதற்கு வேலைகள் பார்ப்பதற்கு ராம் மோட்டார்ஸ், மதுரை கம்பெனிக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1637/2021/எச்.1)

**தீர்மானம் எண். 1**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–2**

இந்நகராட்சியின் பொதுச்சுகாதார வாகனம் எண் TN-58 AS 3984 வண்டிக்கு தகுதிச்சான்று மற்றும் இஞ்சின் ஆயில் பெயிண்டிங் ஒர்க்ஸ், டிங்கர் வேலை, டிப்பர் செக்கப், சைடு மிரர் வேலைகள் பழுது பார்ப்பதற்கு ராம் மோட்டார்ஸ், மதுரை கம்பெனிக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.‘

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1636/2021/எச்.1)

**தீர்மானம் எண். 2**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்: 3**

உசிலம்பட்டி நகராட்சி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின் கட்டணதொகை ரூ.102.19/–இலட்சம் நகராட்சி நிதி நிலைமை சரியில்லாத காரணத்தினால் இன்று வரை செலுத்தப்படாமல் கீழ்கண்டவாறு நிலுவையாகவே உள்ளது.

| வ.எ | விபரம் மற்றும் மின்இணைப்பு எண்: | | தேதி | தொகை |
|---|---|---|---|---|
| 1 | அணைப்பட்டி, உபமின் நிரேற்று நிலையம் | 250–011–560 | 3/2020 முதல் 10/2020 வரை | ரூ.9,75,066/– |
| 2 | எஸ்.மேட்டுப்பட்டி நிரேற்று நிலையம் | 059094500067 | 11/2019 முதல் 06/2021 வரை | ரூ.56,40,214/– |
| 3 | நகர்புற மின் இணைப்பு (OHT STREET LIGHT AND OTHERS) | | 30/06/2020 முதல் 11/11/2020 வரை | ரூ.33,02,163 /– |
| 4 | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ,மதுரை குடிநீர் கட்டண கேட்பு | | 09/2020 முதல் 10/2020 வரை | ரூ.3,02,229/– |
| **மொத்தம்** | | | | **ரூ.10219672/–** |

இந்நகராட்சியில் வரி மற்றும் வரியில்லா இனங்கள் மூலம் பெறப்படும் மொத்த வருவாய் ரூ.952.59/– இலட்சம் ஆகும். இந்கராட்சியில் உள்ள அனைத்து பணியாளர்களின் ஊதிய செலவினம் மட்டும் ரூ. 1051.14/– இலட்சம் ஆகும். இதனை தவிர குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு, தெருவிளக்கு பராமரிப்பு, வாகன பராமரிப்பு, தனியார் துப்புரவு பணியாளர்கள் மற்றும் இந்நகராட்சி பொதுச்சுகாதாரப்பிரிவு இதர செலவுகள் நகராட்சி வருவாய் மூலமே மேற்கொள்ளபட வேண்டியுள்ளது. இந்நிலையில் மின் கட்டண தொகையினை செலுத்த இயலாத காரியம் ஆகும். எனவே, நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டு மின் கட்டணம் செலுத்த ஏதுவாக மான்யத்தொகை ரூ.102.19/– இலட்சம் வழங்கிட பரிந்துரை செய்ய கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களுக்கு கருத்து அனுப்பலாம் மன்றம் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

1).மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 1128/2018/இ1

**தீர்மானம் எண். 3**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

**<u>மன்றப்பொருள்:4</u>**

உசிலம்பட்டி நகராட்சிக்கு 15 –வது மத்திய நிதிக்குழுவின் 2020–21 ஆம் ஆண்டிற்கான மான்ய திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அது சமயம் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.20452/2020/LA3 நாள்.10.11.2020 இன்று 15 வது மத்திய நிதியாக I வது மான்ய தொகையாக ரூ.54.29 இலட்சமும் II –வது மான்ய த்தொகை ரூ.54.29/– இலட்சமும் ஆக மொத்தம் ரூ.108.58 இலட்சங்கள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | புதிய ஜே.சி.பி இயந்திர வாகனம் (3DX)-1 வாங்குதல் | ரூ.33.90/– |
| 2 | வார்டு–03 தேனி மெயின் ரோடு காளவாசல் பகுதியில் அமைந்துள்ள பழைய உரக்கிடங்கிற்கு சுற்று சுவர் அமைத்தல் பணி | ரூ.20.39/– |
| | மொத்தம் | ரூ.54.29/– |

மேலே கண்டுள்ளவாறு வரிசை எண்.01 க்காக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளவும், வரிசை எண்.02 க்காக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 104/2021/இ1)

**தீர்மானம் எண். 4**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்:5</u>**

உசிலம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் 15.08.2021 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 75–வது சுதந்திர தினவிழா நிகழ்ச்சிக்கு தேசியக்கொடி, மிட்டாய் மற்றும் இதர பொருட்கள் வாங்கிய வகையில் வரப்பெற்ற பட்டியலின்படி செலவினத்தொகை ரூ. 3100/–ஐ ஸ்ரீ முருகன் ஸ்டோர் அவர்களுக்கு வாங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). சுதந்திரதினவிழா செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 5**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்:6</u>

இந்நகராட்சியின் வருவாய் மூலதன நிதி 2019–20–ஆம் ஆண்டிற்கான தணிக்கைக் கட்டணம் ரூ. 1,05,695/– (ஒரு லட்சத்து ஐந்தாயிரத்து அருநூற்று தொன்னூற்று ஐந்து மட்டும்) கணக்கு தலைப்பு எண்.0070 other Administrative Service 60 other service-110-Fees for Government Audit conrolled by the Director of Local Fund Audit 2706- Non Tax other fees Audit (D.P.Code-0070-06-770-AA-2769) தலைப்பில் ல்சலுத்தலாம் மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண. 1936/2000/பி1)

**தீர்மானம் எண். 6**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்:7</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தனிப்பிரிவு புகார் மனு எண். 1211902–இல் குறிப்பிட்டுள்ள வார்டு எண். 14, பெரியபூசாரி தெரு கீழப்புதூர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சாலை வசதி மேற்கொள்ளும் பணிக்கு ரூ. 30.00 இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கான செலவுத்தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கு.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1807/2021/சி1)

**தீர்மானம் எண். 7**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்:8</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தனிப்பிரிவு புகார் எண். 1251008–இன் அடிப்படையில் டி.இ.ஒ. ஆபீஸ் தெருவினில் மழைநீர் வடிகாலினை சரி செய்ய ரூ. 40,000/– மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணிகள் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1807/2021/சி1)

**தீர்மானம் எண். 8**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்:9</u>

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்கீழ் பணிபுரியும் சமுதாய அமைப்பாளர்களுக்கு ஒரு நபர் குழுவின் பரிந்துரையின்படி அரசாணை (நிலை) எண். 77, நிதி மற்றும் படிகள் துறை நாள். 26.02.2021–இல் ஊதிய நிர்ணயம் கீழ்க்கண்டவாறு திருத்தி ஆணையிடப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியிடத்தின் பெயர் | முன் திருத்தப்பட்ட ஊதிய விபரம் | தற்போது உள்ள ஊதிய விபரம் | திருத்தப்பட்ட ஊதிய விபரம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | சமுதாய அமைப்பாளர் | Rs.5200-20200 + GP 2400 | Level-8 Rs.19500-62000 | Level-10 Rs.20600-65500 |

மேற்படி அரசாணை (நிலை) எண். 77 நிதி மற்றும் படிகள் துறை நாள். 26.02.2021 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

(ந.க.எண். 1182/2016/சி1)

**தீர்மானம் எண். 9**

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது**

---

**மன்றப்பொருள்:10**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு–6, பேருந்து நிலையம் அருகில் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் திருமகனாரின் சிலை அமைந்துள்ளது. 30.10.2021 அன்று நடைபெற உள்ள தேவர் ஜெயந்தியை முன்னிட்டு தேவர் சிலையினை புதுப்புத்தல், அலங்கார விளக்குகள் அமைத்தல் மற்றும் அங்கு அமைக்கப்பட்டுள்ள நீர் ஊற்றினை புனரமைத்தல் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 2.00/– இலட்சத்திற்கும், மேற்கண்ட தொகையில் பணிகளை மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:-**

1).மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

**தீர்மானம் எண். 10**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்:11**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு எண்.22 பேரையூர் ரோட்டில் அமைந்துள்ள இந்நகராட்சி நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையக் கட்டிடத்தில் பழுதடைந்துள்ள பெண்கள் மற்றும் ஆண்கள் கழிப்பறைகள் தினசரி வந்து செல்லும் நோயாளிகளை அடிப்படை தேவையான கழிப்பறைகளை புனரமைப்பு செய்ய தயார் செய்யப்பட்டுள்ள திட்ட மதிப்பீடு தொகை ரூ. 1.60 இலட்சத்தில் பொதுமக்கள் அத்தியாவசியம் கருதி பணி மேற்கொள்ளவும் அதற்காகும் செலவுத்தொகையை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 11**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது**

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,
உசிலம்பட்டி நகராட்சி